

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.7.2023) சென்னை, மெரினா கடற்கரையில் அமைத்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் நடைப்பெற்று வரும் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் பொதுப்பணி துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஊரகப் பகுதி மாணவர்களுக்கு உலகத் தரத்தில் தொழில்நுட்பக் கல்வி - மைக்ரோ சாஃப்ட்டுடன் ஒப்பந்தம்!

# அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் - பாராட்டு!

## “கல்வியிற் சிறந்த தமிழரெனப் பார்போற்றப் பாடுபடுவோம்!” எனப் பதிவு!

**சென்னை, ஜூலை 8- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று விடுத்த சமூக வலைதளப் பதிவொன்றில், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதி மாணவர்களுக்கு உலகத் தரத்தில் தொழில்நுட்பக் கல்வி வழங்கிட ‘மைக்ரோ சாப்ட்’ நிறுவனத்துடன் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை ஒப்பந்தம் மேற்கொண்ட அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியைப் பாராட்டியுள்ளார்.**

**‘கல்வியிற் சிறந்த தமிழரெனப் பார் போற்றப் பாடுபடுவோம்!’ என அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தம்பி அன்பில் மகேஸ் அவர்கள், அமெரிக்கப் பயணத்தின்போது, ஊரகப் பகுதி மாணவர்களுக்கு உலகத்தரத்திலான தொழில்நுட்பக் கல்வி அறிமுகத்தை வழங்க Microsoft உடன் இணைந்து தமிழ்நாடு



பள்ளிக்கல்வித் துறை மேற்கொள்ளும் முன் முயற்சிகளைப் பற்றி என்னிடம் தொலைபேசியில் தெரிவித்தார்.

தமிழர்களின் இதயத் துடிப்பான கல்வியை உலகத்தரத்திற்கு உயர்த்துவதே நமது திராவிட மாடல் அரசின் இலக்கு. அதற்கான பணிகளில் ஈடுபடும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுகள்!

கல்வியிற்சிறந்த தமிழரெனப் பார் போற்றப் பாடுபடுவோம்!

இவ்வாறு அப்பதிவில் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.7.2023) சென்னையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் அவர்களின் மகள் பிரதிக்ஷா ஜெ.ஆர். நவமணி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அன்புமணி ராமதாஸ், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், செல்வி ஜோதிமணி, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.



மதுரையில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நூலகத்தை வருகிற 15ந்தேதி கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளார். அதற்கான தயார் நிலை குறித்து பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்ட போது எடுத்தபடம். உடன் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், பொதுப்பணித்துறை அரசு முதன்மை செயலாளர், பொது நூலகத்துறை இயக்குநர், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், பூமிநாதன் உட்பட பலர் உள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனி பிறந்த நாள்!

# ‘உங்களின் ஈடு இணையற்ற தலைமைப் பண்புகளால் அனைவருக்கும் ஊக்கமளித்து தொடர்ந்து ஒளி வீசிடுக!’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜூலை 8- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள செய்தியில், “உங்கள் ஈடு இணையற்ற தலைமைப் பண்புகளால் அனை வருக்கும் ஊக்கமளித்து தொடர்ந்து ஒளி வீசிடுக!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

இந்திய கிரிக்கெட் அணி யின் முன்னாள் கேப்டன், என்றென்றும் சி.எஸ்.கே. அணியின் தல எனப் போற்றப்படும் எம்.எஸ். தோனி அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

உங்கள் சாதனைகள் மற்றும் உங்கள் எளிமையான தொடக்கங்கள் இந்தியா முழுவதும் உள்ள எண்ணற்ற இளைஞர்களின் வாழ்க்கை யில், குறிப்பாக சாதாரண பின்னணியிலிருந்து வந்த வர்களின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

உங்கள் ஈடு இணையற்ற



தலைமைப் பண்புகளால் நீங்கள் தொடர்ந்து ஒளி வீசிடவும், அனைவருக்கும் ஊக்கமளிக்கவும் வாழ்த்து கிறேன்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஜோசப் சாமுவேல், எம்.எல்.ஏ. முன்னிலை! ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் தலைமை!

# அம்பத்தூர் தெற்கு பகுதியில் - மாற்றுத்திறனாளிகளுக்கு நல உதவிகள்!

## டிசம்பர் 3 இயக்கத்தலைவர் பேராசிரியர் தீபக் நாதன் வழங்குகிறார்!

சென்னை, ஜூலை 8- சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் தெற்கு பகுதியில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் கலைஞர் 100, 14வது நிகழ்ச்சியாக முத்தமிழறிஞர் மக்கள் போராளி - முழுமையாய் உணர்ந்தவர் மாற்றுத்திறனாளி என்ற தலைப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டம் வழங்கும் விழா 09.07.2023 அன்று மாலை 4.00மணியளவில், சென்னை, பாடி, குமரன்நகர், மகாத்மா காந்தி ரோடு, மாநகராட்சி திடலில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மாவட்டச் சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஜி.வி. நாகவள்ளி பிரபாகரன் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், வடக்கு பகுதிச் செயலாளருமான ஜோசப் சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினரும், 7வது மண்டலக்குழுத் தலைவருமான பி. கே.மூர்த்தி. எம்.சி., அம்பத்தூர் தெற்கு, கிழக்கு பகுதிச் செயலாளர்கள் டி.எஸ்.பி.. ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், டி.பி.எப்.மோகன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி., டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி., ஜெ.பாலமுருகன், த.பிரகாஷ்குமார், எம்.இ.சேகர், நா.நெப்போலியன், இரா.டீக்கா, மு. நடராஜன், து. செல்வராஜ், ஆர்.கதிரவன், எஸ்.கவிதா செல்லதுரை, கு.சங்கர், ஆர். ஜெயராமன், எஸ்.மதியழகன், ஆசை ஆரோக்கியம், எஸ்.சிவசுப்பிரமணியம், ஏ.பி.வெங்கடாஜலபதி, எஸ்.ஜெகநாதன், எஸ். மோகன்ராஜ், சி.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். எம். மணிகண்டன், ஏ.வ.சாந்தகுமார், டி.எஸ்.கே.சுரேஷ், ஜி.மகேஷ்குமார், பி.கே. பிரபு, எ.மீனாட்சி, எம். தமிழ்செல்வி, ஆர்.புனிதா, எம்.என்.நாகராஜ், எம்.எஸ். செந்தில்நாதன், டி.செந்தில்குமார், யு.நவநீதம், போ. சின்னையா, சோ.தேவன், கண்.இராமலிங்கம், வ. கணேசன், ர.துரை, எ.பி. ரவி, அ.ராஜேந்திரன், மு. மனோகரன், ஜிம்.ஆர். பாலாஜி, ஜெ.வெற்றி செல்வன் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இவ்விழாவில் டிசம்பர் 3 இயக்கத் தலைவரும், மாற்றுத் திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் பேராசிரியர் தீபக் நாதன் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும் இவ்விழாவில் ப.ரங்கநாதன், கே.கந்துரு, கே.எஸ்.ரவிச்சந்திரன், சங்கர் நாராயணன், தமிழன் பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், கே.எஸ். எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதிஇளம்சுருதி, ஆர்.வரதா ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

88வது வட்டக் கழகச் செயலாளர் சி.சீனிவாசன் நன்றி கூறுகிறார்.

க.கோவிந்தராஜ் தலைமை! மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி. - சி.பி.திருமலை முன்னிலை!

# அண்ணாநகர் 101 வது வட்ட தி.மு.க. சார்பில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

## நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் - ச.பரமசிவம் - கார்த்திக் மோகன் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூலை. 8 சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்டக் கழக தி.மு.க. சார்பில் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா நாளை (9.7.2023 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 11.30 மணிக்கு, அண்ணாநகர் கிழக்கு, திருவள்ளுவர் நகரில் நடைபெறுகிறது.

101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமை வகிக்கிறார்.

மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி, சி.பி.திருமலை, வி.இராஜேந்திரன், ஜெ.வீரமணி, டி.தயாளரங்கன், டி. சம்மந்தா, ஆர்.ஜி.ராகவநாயகம், எம்.பாலசந்தர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.முரளிகிருஷ்ணன், ஐ.சி.எப்.பி.வேலாயுதம், ஜெ.மகேஸ்வரி, டி.ஜெ.முருகன், ஆர்.புருஷோத்தமன், டி.ராஜா, வி.கண்ணன், எம். குணசேகரன், கே.செந்தில், வி.ஆர்.சதீஷ்குமார், பி.குப்புசாமி, என்.மகேஷ், கே. தினேஷ்குமார், ஏ.அசோக் குமார், இ.கல்பனா, என். எஸ்.சரவணன், எம்.கோவிந்தசாமி, பொன்.கண்ணபிரான், பரிமளா அசோகன், கீதா சிகாமணி, என்.முரளி, சிவகாமி செல்வராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணாநகர் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், எஸ்.சேரன், ஏ.டி.முருகன், கராத்தே என்.ஆனந்த், ராணி ரவிச்சந்திரன் எம்.சி. ஆகியோர் அறுசுவை உணவினை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ். கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின்பாபு, ஆ.ஏகாம்பரம், கு.பாபு, பி.சந்திரசேகர், எம்.ஜி.ரவிக்குமார், பி. ஜெய்சங்கர், அருள் கண்ணன், வசந்தி பரமசிவம் எம்.சி, புஷ்பலதா ஜெய்சங்கர் எம்.சி, பா.பிரபு, வி.சாய் செல்வம், கே.பி.சுரேந்தர், மரியா பிரான்ஸிஸ், இரா. இளங்கோவன் மற்றும் மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், 101 வது வட்டக் கழக நிர்வாகிகள், வட்டச் செயல்வீரர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

101 வது வட்ட துணைச் செயலாளர் எஸ்.ஆர்.பாஸ்கர் நன்றி கூறுகிறார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு நேற்று (07/07/2023) வெள்ளிக்கிழமை, சென்னை பெரியமேட்டில் உள்ள பெயின்ஸ் மெமோரியல் பேப்டிஸ்ட் சர்ச் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், வருமுன் காப்போம் மருத்துவ முகாம் நினைவாக நடைபெற்ற 100 பெண்களுக்கு 100 முழுமையான பரிசோதனை செய்யும் உலக சாதனை மருத்துவ முகாமில் கலந்துகொண்டு பரிசோதனை செய்த பெண்களுக்கு மருத்துவ சான்றிதழ் மற்றும் நலத்திட்ட உதவிகளை திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வழங்கினார். உடன் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், திமுக செய்தி தொடர்புக்குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மகளிர் ஆணைய தலைவர் குமரி விஜயகுமார், தமிழ்நாடு மகளிர் ஆணைய உறுப்பினர் மாலதி நாராயணசாமி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (07.07.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜெர்மனியின் கொலோனில் ஜெர்மன் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் 30.07.2023 முதல் 05.08.2023 வரை நடைபெற உள்ள 8வது உலக அளவிலான குள்ள மனிதர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளுவதற்காக தமிழ்நாடு புதுக்கோட்டையைச் சார்ந்த இறகுப்பந்து வீரர் பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நிதியுதவியாக ரூபாய் 2.49 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உடனுள்ளார்.